**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**C.C.No.18/2025**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சண்முகசுந்தரம்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பரமசிவம் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 60/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 03.11.2025 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பண்ணைக்காட்டில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் . அவர் எனது இடத்தை குத்தகைக்கு எடுத்திருந்தார் . நான், எதிரிக்கு என் நிலத்தை ஒப்பந்ததன்தின் அடிப்படையில் குத்தகைக் விட்டிருந்தேன். குத்தகை ஒப்பந்ததன்தின்படி குத்தகை காலம் 3 வருடம் என பேசப்பட்டு மறுபயனாக எதிரி என் நிலத்திற்கு சோலார் மின் வேலி அமைப்பது என பேசப்பட்டது. பிறகு இரண்டைகால் வருடங்களாக எதிரி ஒப்பந்தத்திற்கு உட்பட்டு எந்தவித மின்வேலியும் அமைக்காததால் ஊரார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது . 23.01.2025 ம் தேதி காலை மீண்டும் என் குத்தகை நிலத்திற்கு சென்று எதிரியை குத்தகை நிலத்திலிருந்து காலி செய்யுமாறு சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். 23.01.2025 ம் தேத மாலை சுமார் 07.45 மணியளவில் நான் என் வீட்டில் மனைவி மஞ்சுளாதேவி , மகள் ஜெயகீர்த்தனா , மருமகன் யோகேஷ்வரன் ஆகியோர்கள் வீட்டில் சாமி கும்பிட்டு கொண்டிருந்தபோது எனது வீட்டு வாசலுக்கு வந்த எதிரி எங்கள் வீட்டை பார்த்து வெளியே வாங்கடா என சொல்லி கத்தினார். அப்போது நானும், எனது மனைவியும், எனது மகள் வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி அங்கு என் வீட்டு வாசலில் நின்று அசிங்கமாக

திட்டிக்கொண்டிருந்தார். நான் வெளியே வந்தபோது எதிரி என்னை என் குடும்பத்தார் முன்னிலையில் தேவிடியா மகனே என திட்டி அவர் முதுகுக்கு பின்புறமாக கையால் மறைத்து வைத்திருந்த அரிவாளை கொண்டு என்னை பார்த்து வீசி, வெட்ட முயன்றார்.

அதை நான் எனது இரண்டு கைகளை கொண்டு தடுத்தபோது அரிவாள் எனது வலது உள்ளங்கை , மோதிரவிரல், நடுவிரல், சுண்டுவிரல் ஆகியவற்றில் வெட்டுபட்டு எனக்கு காயம் ஏற்பட்டது . எனக்கு இரத்தம் வடிவதை கண்டு எனது மகள் ஜெயகீர்த்தனா அலறி சத்தம் போட்டாள். அப்போது எனது மனைவி மஞ்சுளா தேவி மற்றும் பிரச்சனையின் போது அங்கு நின்றிருந்த சுப்புலட்சுமி மற்றும் முருகேசன் ஆகியோர்கள் எதிரி கருப்பசாமியை மறைத்து , பிடித்து அங்கிருந்து விலக்கி அழைத்து சென்றார்கள். அப்போது எதிரி அவரை பிடித்து அழைத்து சென்றவர்களை விலக்கி கொண்டு , என்னை பார்த்து என் தோட்டத்திற்குள் வந்து பார் , உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி என்னை பார்த்து மிரட்டினார் . பிறகு அங்கிருந்தவர்கள் என்னை ஜீப்பின் மூலம் பண்ணைக்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு எனக்கு கையில் ஏற்பட்ட வெட்டுக்காயங்களுக்கு தையலிட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு நான் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த தாண்டிக்குடி போலீசார் என்னை விசாரித்துவிட்டு சென்றார்கள் . அப்போது நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

பண்ணைக்காடு அரசு மருத்துவமனையில் வைத்து நான் வாக்குமூலம் கொடுத்தேன். என்னை விசாரித்த போலீசாரின் பதவி நிலை விபரம் எனக்கு தெரியாது , ஆனால் தாண்டிக்குடி போலீசார் விசாரணை செய்தார்கள். எதிரி இந்த வழக்கில் சிறை சென்ற பிறகு குத்தகை நிலத்தின் உடைமை என்வசம் வந்துவிட்டது என்றால் சரிதான். எதிரியை எப்போது கைது செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது, சம்பவம் நிகழ்ந்த அன்று நான் புகார் மட்டும்தான் கொடுத்தேன். நான் என்வீட்டில் அமைக்கப்பட்டிருந்த தகர அமைப்பின் மீது விழுந்து எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது என்றாலும்,

அந்த காயத்தை பயன்படுத்தி எனக்கு போலீசில் உள்ள செல்வாக்கின் காரணமாக பொய்யாக புகார் கொடுத்து எதிரி மீது வழக்கு பதிவு செய்துள்ளது என்றால் சரியல்ல. போலீசர் எதிரிவசமிருந்து அரிவாளை கைப்பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுகுறித்து தெரியாது. இவ்வழக்கு சம்பவத்திற்கு இரண்டு நாட்கள் முன்பு குத்தகை நிலம் சம்பந்தமாக பஞ்சாயத்து பேசி , எதிரி என்மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல , நான்தான் புகார் கொடுத்தேன் . நான் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் என்னையும் , எதிரியையும் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை , நான்தான் காவல்நிலையம் சென்று எனது புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விசாரிக்க சென்றேன் . நான் இளங்கலை படித்து பாதியில் நிறுத்திவிட்டேன் . நான் பண்ணைக்காடு அ .தி.மு.க செயலாளராக உள்ளேன். நான் என் கட்சி வேலை நிமித்தமாக அடிக்கடி காவல்நிலையம் செல்வேன் என்றால் சரியல்ல . எனது அரசியல் செல்வாக்கு மற்றும் பணபலத்தை வைத்து பொய்யாக எதிரி வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . எதிரியிடமிருந்து குத்தகை நிலத்தை அபகரிக்கம் நோக்கில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.11.03 17:40:00 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**C.C.No.18/2025**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **மஞ்சுளா தேவி** | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : ----- | கணவர் பெயர் | : **சண்முகசுந்தரம்** |
| கிராமம் | : பண்ணைக்காடு | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 53/2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 03.11.2025 |

**( எதிரி ஆஜரில் உள்ளார்)**

**முதல் விசாரணை :**

நான் பண்ணைக்காட்டில் வசித்து வருகிறேன் . சாட்சி சண்முகசுந்தரம் எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். 23.01.2025 ம் தேதி வியாழக்கிழமை அன்று மாலை சுமார் 7.30–7.45 மணியளவில் நான் என் வீட்டில் எனது மகள் ஜெயகீர்த்தனா, மருமகன் யோகேஷ்வரன், எனது கணவர் ஆகியோர்கள் வீட்டில் இருந்தபோது வெளியே யாரோ ஒரு நபர் அசிங்கமாக பேசி திட்டும் சத்தம் கேட்டது . நாங்கள் கதவை திறந்து வெளியே வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி வீட்டில் வாசலில் நின்றுகொண்டிருந்தார். ஆஜர் எதிரி பேசிக்கொண்டே எங்கள் வீட்டின் திண்ணைப்பகுதிக்கு வந்து ஆஜர் எதிரி என் கணவரை பார்த்து தேவிடியா மகனே என்று சொல்லி எதிரி அவர் பின்புறமாக கையில் வைத்திருந்த அரிவாளை கொண்டு என் கணவரை நோக்கி வெட்டினார். என் கணவர் வெட்டிய அரிவாளை கையால் தடுத்தபோது இடதுகை மோதிரவிரல் அருகே வெட்டுக்காயம்பட்டு இரத்தம் வெளியேறியது . நிலம் குத்தகை தொடர்பாக என் கணவருக்கும், எதிரிக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது .

வெட்டுப்பட்ட எனது கணவரை அங்கிருந்தவர்கள் பண்ணைக்காடு அரசுமருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவைத்தார்கள். பிறகு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு வழக்கு பதிவு செய்தார்கள் . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

குத்தகை காலம் 3 வருடங்கள் என்ற விபரம் மட்டும் தெரியும். சம்பவத்தின் போது நான் வீட்டினுள் இருந்தேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து முடிந்தபிறகுதான் வந்தேன் என்றால் சரியல்ல, நான் வந்துகொண்டிருக்க சம்பவம் நடைபெற்றது . அரிவாளின் நீளம் , அகல விபரம் எனக்கு தெரியுமா என்றால் பதற்றத்தில் நான் அதை கவனிக்கவில்லை . நான் சொன்னதுபோன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், என்வீட்டில் இருந்த தகரம் கிழித்து என் கணவருக்கு கையில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரியிடம் இருந்து இடத்தை அபகரிக்கும் நோக்கில் பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . எனது கணவரும் , எதிரியும் தெலுங்கு மொழியில் பேசி சண்டை போட்டுக்கொண்டார்கள் என்றால் சரிதான் . எனது கணவருக்கு கேட்டுக்கொண்டதன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.11.03 17:40:06 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.